# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா - 2023



31-3-2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரநோக்கு!

ஒளிமயமான வாழ்விற்கு

தரமான அடிப்படைக் கல்வி

# பணிக்கூற்று

பூகோள ரீதியாக சவால்களுக்கு முகங்கொடுக்க சுவடிய புத்தாக்கங்களை உருவாக்கும் பொருத்தப்பாடுடைய சமநிலை ஆளுமையுள்ள செயற்றிறன்மிக்க பண்பு சார் நற்பிரஜைகளை சமூகத்துக்களித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி /வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழியவே
வளமான வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
(வாழிய)

அன்னை தந்தையின் ஆதரவின் பின்
ஆரம்பக் கல்விக்கு அடி எடுத்து வைத்த
சின்ன மழலைகளின் கல்விக்கு வித்திட்ட
சிறந்த நல்ல வித்தியாலயமே
(வாழிய...)

எண்ணும் எழுத்தும் இசையுடன் கற்று
எழில் தரும் சுற்றாடற் கல்வியுடனே
சமய ஒழுக்கம் ஆங்கிலத்தோடு
ஆக்கமும் ஊக்கமும் கற்றுவளம் பெற
(வாழிய...)

வனப்புறு நெல்வள கழனியும் சூழ
தண்புனல் அருவி மருங்கினில் பாய
கவின்பெறு கலைகள் அழகுடன் மிளிர
வாழ்க நம் கலைக்கூடம் வளர்க இதன் பணி
(வாழிய...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

**வட்டக்கச்சி வந்தோரை வரவேற்று வாழ வைக்கும்அழகிய ஊர்,வயலும் வயல் சார்ந்ததுமான மருதநிலத்தின் நடுவே காட்சி தரும் எழுச்சி தரும் கிராமம் எமது வட்டக்கச்சியாகும்**

இரணைமடு குளத்தின் வலது கரை வாய்க்கால் வழியே வரும் நீரைப்பயன்படுத்தி வளர்ந்து நிற்கும் உயரிய கிராமம் உழைப்பிற்கும் உயரிய பண்பாடு விழுமியங்களுக்கு சொந்தமான தனித்துவ்மான கிராமம் இந்த கிராமத்தின் பாரிய எழுச்சிக்கும் மேன்மைக்கும் கல்விச் சாலைகளின் பங்களிப்பு என்பது மிகப்பெரியதாகும் மிகவும் குறுகியதூர இடைவெளியில 08 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் அமைந்திருந்து இந்த மாவட்டத்தின் அதிகள வான மாணவர்களை தம் அகத்தே கொண்டு கல்வியைப் புகட்டி வருகின்றன அந்த வகையில் எமது பாடசாலையின் செயற்பாடுகள் தனித்துவமானவை

1965 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரிஇந்த மாவட்டத்தில் எந்த வகையிலும் குன்றாத வளத்துடனும் கல்விசேவையுடனும் நிமிர்ந்து நிற்கும் ஒரு கலைகூடமாகும், கல்வி கலைத்திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப 2013 ஆம் ஆண்டு 1000பாடசாலைஅபிவிருத்தித்திட்டத்தின் கீழ்1-5 வரையான பாடசாலை ஆரம்பப்பாடசாலையாகவும் 6-13 வரை இடைநிலைப்பாடசாலையாகவும் பிரிக்கப்பட்டது 01.01.2013 இந்தப் பாடசாலை உதயமாகி சிலகாலம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் இயங்கி வந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.06.2013 அன்று இந்த வளாகத்தில் தனியாக தமது செயற்பாடுகளை ஆரம்பித்தது வளங்கள் ஏதுமற்ற சூழலில் சமூகத்துடன் இணைந்து இந்த இடத்தில் இந்தப் பாடசாலையை இயக்கத் தொடங்கிய பாடசாலையின் முதல் அதிபர் திரு.தம்பிஜயா தர்மராஜாவின் முயற்சி என்றும் மறக்கமுடியாததாகும்.


ஆரம்ப நாட்களில் எந்த வித அடிப்படை வளங்களும் இன்றி இரு தகரக் கொட்டகைளுடன் மரநிழலை அதிகம் நம்பி இயங்கி வந்த இந்தப் பாடசாலை பத்து ஆண்டுகளில் வளம் கொழிக்கும் ஓர் பாடசாலையாக மாற்றியது எம் எல்லோரினதும் உழைப்பினதும் முயற்சி யினதும் அடையாளத்தின்ஆதாரமாகும்

இந்த ஆண்டு எமது பாடசாலையின் வரலாற்றில் மிக முக்கிய ஆண்டாகும். 12.06.2023 இந்த வளாகத்திற்குள் நாம் வந்து 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறோம்.இந்தக் கிராமத்தில் பிறந்து கல்வி கற்று உயர்ந்த நாம் எமது கிராமத்தின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் எமது உழைப்பினை வழங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவும் இருப்போம். அந்த வகையில் எமது கிராமத்து பாடசாலைக்கு என்னால் முடிந்த உழைப்பினை வழங்க விரும்பி 03.03.2016 இந்தப் பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்றேன். அரசு, கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உழைப்பினை உவந்தேற்று தட்டிக் கொடுக்கும் பண்பு கொண்ட வள்ளல்கள் தன்னார்வ நிறுவனங்களின் பாரிய ஆதரவுடன் ஆரம்பபாடசாலை களில் மாவட்டம், மாகாணம் தாண்டி பெயர் சொல்லும் பாடசாலையாக இந்தப் பாடசாலையை நாம் உருவாக்கியுள்ளோம் என்பதில் நாம் பெருமைகொள்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்ப நாட்களில் சுட்டெரிக்கும் வெயிலில் தகர கூடாரங்களின் கீழே போதிய தளபாடங்களின்றி கூட்டு வகுப்பறைகளில் கல்வி கற்ற நாட்களை கடந்து தற்போது தனியான அழகிய நிரந்தர வகுப்பறைகள் அங்கே Smart பலகைகள், சகல வகுப்புக்களிலும் மின் வசதியும், நீர் வசதியும் அலாதியாய் அமைந்திருக்க மாணவர் விரும்பிக் கற்கும் உயரிய கற்றல் சூழல், ஆரம்பப் பள்ளிகளில் எங்கும் இல்லாத கணினி கூட வசதி, நிலையான கணினி ஆசிரியர், மிகச் சிறந்த நூலக வசதி, மின்சாரத்தை சேமிக்க சூரிய படலம், மழைநீரை சேமிக்க மழைநீர் தாங்கி சூழலோடு இசைந்த வாழ்வை எம் மாணவருக்குத் தந்தோம்.

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கேற்ப கேட்டுக்கொண்டே இருந்தோம் தட்டிக் கொண்டே இருந்தோம் உள்ளக் கதவுகள் திறந்தன எம் மாணவர் எண்ணிக்கைக்குஏற்ப புதிய கட்டடங்களை தர முடியாது என பலர் மறுத்த போதும் முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலாளர் மதிப்பார்ந்த அ.பத்திநாதன் அவர்கள் செயற்பாட்டறைகள் மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்துடன் கூடிய மாடிக்கட்டடத்தை தந்தார். கொரோனா பேரிடர், பொருளாதார நெருக்கீடுகள் மத்தியிலும் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போதைய பிரதம செயலாளர் மதிப்பார்ந்த எஸ்.எம்.சமன் பந்துலசேன அவர்கள் 2023 ஜனவரி 04 ஆம் திகதி திறந்து வைத்து மாணவர்களுக்கு கையளித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வளாகத்திற்குள் வருபவர்கள் ஏதோ ஒன்றை செய்ய வேண்டும் என எண்ணிக் கொள்வர். கொடை வள்ளல் S.K நாதன் அவர்கள் எம் பாடசாலை வந்த போது மாணவரின் நீர் தேவை பற்றி பேசினோம். அவரின் சொந்தப் பணம் 15இலட்சம் செலவில் புதிய நீர்த்தாங்கியை அமைத்துத் தந்தார். எமது பாடசாலை மாகாணத்தில் அனைத்து வகுப்புக்களிலும் Smart Board உள்ள பாடசாலை என அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலையாகும். எனவே இதனை மேலும் வலுப்படுத்த கனடாவில் வாழும் எமது பாடசாலை பழைய மாணவன் பொறியியலாளர் கி. சிவகுமார் அவர்கள் 05 இலட்சம் பெறுமதியான Smart Board ஒன்றை அண்மையில் வாங்கித்தந்தார். திரும்பும் இடமெல்லாம் மாணவர் கற்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும் என்ற எனது எண்ணத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சுவரோவியங்களை வரைவதற்கு எமது பெற்றோர் சுதர்சன் மற்றும் நண்பன் பேரம்பலம் ஜெயகரன் (UK) ஆகியோர் ஆதரவு தந்தனர்.

பாடசாலையின் பாதுகாப்பை ஏற்படுத்த சுற்றுமதில் அமைக்கும் செயற்பாட்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன் அவர்களும் பழைய மாணவி கலைமதி, பழைய மாணவன் கனியூட் செல்வராஜ் ஆகியோரும் பங்களிப்புசெய்தனர்.இந்த வேலையை பூர்த்தி செய்ய இன்னும் எமக்கு ஆதரவு தேவையாக உள்ளது.

பாடசாலைகள் சிறியவையோ, பெரியவையோ தேவைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. இதனை யாரும் தாமாக வந்து தீர்த்து வைத்து விடப் போவதில்லை.எமது தேவைகளை பூர்த்தி செய்யவும் கல்வியை மேம்படுத்தவும் நாம் அதிகமானவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலேயே இருக்கிறோம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது மாணவர்களுக்கு "பசும்பால்" வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதற்கு லண்டனில் வாழும் திரு. தியாகராம் என்பவர் அனுசரனை வழங்கி வருகிறார். தற்போது இந்த அனுசரனையாளருக்கு தொடர்ந்து வழங்குவதில் சில சிரமங்கள் ஏற்பட்ட போதும் புதிய நலன் விரும்பிகள் சிலர் அதற்கு ஆதரவு நல்கி வருகின்றனர்.

Rtn.ந.சிவகுமார் முகம் தெரியாத உறவுகளான கைலைவாசன் இந்திரவாசன் , HNB வங்கி முகாமையாளர் திரு.சசிவர்ணன் ஆகியோரும் இந்த திட்டத்தை கொண்டு நடாத்த பெரிதும் உதவி புரிந்து வருகின்றனர். அத்துடன் இந்த நண்பர்களின் உதவியுடன் எமது அயலிலுள்ள பாடசாலைகள் 3 இற்கு இந்த பால் வழங்கும் செயற்றிட்டத்தை விரிவாக்கம் செய்யவும் எம்மால் முடிந்துள்ளது.

சமூகத்தின் கலாசாரம் சார் பண்பையும், இருப்பையும் தீர்மானிப்பதில் கல்வியே முக்கியமானது. ஒரு சமூகத்தின் கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் பொழுது அந்த சமூகமும் வளம் பெறுகின்றது. சமூகம் வளம் பெற வேண்டுமாயின் கல்வி மீதான முதலீடுகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியோடு இணை மற்றும் மறைக் கலைத்திட்டங்கள் மாணவரது ஆளுமையை மேம்படுத்த அவசியமாகிறது. ஆரம்ப பாடசாலையான எமது பாடசாலையில் கல்வியோடு இணைந்த செயற்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.விளையாட்டு, சங்கீதம் ,நடனம், சித்திரம் என்பனவற்றுக்கும் ஊக்கமளிக்கப்படுகின்றது. வாரத்தில் இரண்டு நாட்கள் தரம்-1 இல் இருந்து சங்கீதம் முறையாக கற்பிக் கப்படுகிறது.இதற்கான அனுசரனையை எமது பாடசாலை அபிவிருத் திச் சங்க செயலாளர் Rtn.பா.ஜெயராஜிதன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு பாடசாலையின் அகச்சூழல் மற்றும் புறச்சூழல், கற்றலுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தாலும் பொதுப்பரீட்சைப் பெறுபேறு-களே அதன் அதீத மேன்மையின் அடையாளமாகும். நீண்ட காலமாக எமது தரம்-5 இன் புலமைப்பரிசில் பெறுபேறுகள் உயர் நிலையிலேயே இருந்து வருகின்றன. 2020 இல் 100% வீத சித் தியைப் பெற்றோம். கொரோனா மற்றும் பொருளாதார நெருக் கடிகளால் பாடசாலைகள் நீண்ட நாட்களாக மூடப்பட்ட போது இந்தப் பெறுபேறு வீதமாக 2021 இல் 88% மாக குறைவடைந் தது. ஆயினும் தொடர்ச்சியான இணைய வழி வகுப்புக்கள் செயலட்டைகளை நாமே வீடுகளுக்கு கொண்டு சென்று வழங் கியமை, அவற்றை மீளப்பெற்று திருத்தி கொடுத்தமை, பெற்றோர் கள் இணைந்து இந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்ததால் 2022 இல் எமது பெறுபேறு 95.4% மாக உயர்ச்சி பெற்றது. நாம் கல் விக்கான ஆதரவுடன் மாணவர்களது குடும்பங்களின் மேம் பாடுகளிலும் எம்மால் முடிந்தளவு அக்கறை செலுத்தி வருகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் மனநிறைவடைகின்றோம் மாணவர்களின் சுகாதார மற்றும் மருத்துவ மேம்பாட்டிற்கான உதவிகள்,போசாக்குணவிற்கான உதவிகளை எம் நலன்விரும்பிகள், மற்றும் நண்பர்களின் உதவியுடன் தொடர்ந்து செய்து வருகின்றோம். இது எமக்கு மனநிறைவு தரும் செயற்பாடாகும்.

நாம் பாடசாலையில் வளங்களைப் பெருக்கினாலும், கற்றலை சிறப் பாக மேற்கொண்டாலும் ஆரம்பக் கல்வியின் சிறப்பும் மேன்மையும் பெற்றோரின் அதீத அக்கறையிலும் கவனத்திலும் இருக்கின்றது. வளம் பொருந்திய எமது கிராமத்தில் இன்னும் கல்வி மீதான ஈர்ப்பில் அதிக கவனம் செலுத்தாத பெற்றோர்கள் இருக்கின்றார்கள் என்பது கசப்பான உண்மை. குடும்ப பிரிவு, குடும்ப வன்முறை , அதிகரித்த தொலைக் காட்சி,தொலைபேசி பாவனை ஆடைத்தொழிற்சாலை வேலைகள், மதுப்பாவனை,போன்றன பிள்ளைகளின் கல்வியில் தாக்கம் செலுத் துவதாக அமைந்துள்ளது. இவைகுறைக்கப்படாமல் கல்வியில் முழுமை பெற முடியாது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது பரிசளிப்பு விழாவினை நாம் நடத் தவில்லை இதற்கு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளே காரணமாகும்.
நாட்டின் தாக்கம், வீட்டில் நிச்சயம் செல்வாக்கு செலுத்தும். ஆயினும் தரம்-05 புலமைப் பரிசில் பாராட்டு விழாவினை தொடர் ச்சியாக நடாத்தி வருகின்றோம். இவ்வாறான விழாக்கள் மாணவர் களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வழங்குபவை மாணவர் கள் மேன்மையுற உந்து சக்தியாக அமைபவை. அந்த வகையில் மிகச் சிறப்பாக இந்த பரிசளிப்பு விழாவினை நடாத்த எமது பழைய மாணவர் பெரிதும் ஊக்கமளித்து வருகின்றனர். அதிலும் புலம்பெயர் பழைய மாணவர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது எமது கிராமத்தின் பழைய மாணவர் உலகம் பூராகவும் பரந்து வாழினும். தொடர்ச்சியாக எமது கிராமம் பாடசாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஒரு சில மாணவர்கள கணிசமான பங்களிப்பை தொடர்ந்து வழங்கி வருவது பாராட் டப்படவேண்டியதாகும்,அவர்களின் ஆதரவு எந்தக் காரியத்தையும் நம்பிக்கையுடன் செய்வதற்கு எமக்கு தூண்டு கோலாக அமைகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக இரண்டு ஆண்டுகளின் பின்னர் இந்த பரிசளிப்பு விழாவினை நடாத்த நாம் ஒழுங்குகளை மேற்கொண்ட போது அதற்காக அனுசரனை வழங்கிய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பேராதரவு பாராட்டுக்குரியது. பரிசளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்கலே பிரதானமானது. அதனை எமது விழா நிறைவாக செய்துள்ளது என நம்புகின்றேன்.

இந்த பாடசாலையின் பத்து ஆண்டுகள் பயணத்தில் அதிக காலம் நாம் சேர்ந்து பயணித்திருக்கின்றோம். ஒற்றுமை, கூட்டிணைவு, வெளிப் படைத் தன்மை, விடாமுயற்சி, நற்புணர்வு மூலம் நாம் பணியாற்றும் நிறுவனத்தை வளர்த்துச் செல்ல முடியும் என்பதை நிரூபித்துக் காட் டியுள்ளோம்.

அந்த வகையில் இந்த மேன்மைகளுக்குக் காரணமாக என்னோடு கை கோர்க்கும் ஆசிரியப் பெருந்தகைகள், கல்வி சாராஊழியர்கள், பெற் றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர்கள் குறிப்பாக செயலாளர் திரு.ஜெயராஜிதன் மற்றும் திரு.புஸ்பராசா, உணவுக் குழுவில் இருந்து செயற்படும் அன்பிற்குரிய அம்மாக்கள், கேட்கும் போதெல்லாம் உதவி செய்யும் எனது நண்பர் கள் அனைவருக்கும் எனது நெஞ்சகலா நன்றிகள். நீண்டு கிடக்கும் இந்தக் கல்விச் சாலையின் செயற்பாடுகளில் உங்களுடன் சேர்ந்து பயணிக்கவும் இந்த மாணவ சமூகத்திற்கு பணி செய்யவும் வாய்ப் பொன்றை வழங்கிய இறைவனுக்கும் என் நன்றிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆரம்ப வித்தியாலயத்தின் பணிகளை ஊக்குவித்து மாணவர்களைப் பாராட்ட வருகை தந்து எம்மை பெருமைப் படுத்தும் பொறியியற் பீட பீடாதிபதி Dr.K. பிரபாகரன் ஐயா அவர்களுக்கும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு வலயப் பிரதிநிதியும், எமது உதவிக் கல்விப் பணிப் பாளருமான திரு. அ. ரவீந்திரன் அவர்களுக்கும், எப்போதும் இந்த மாவட்டத்தின் கல்வி மற்றும்,அபிவிருத்தி செயற் பாடுகளை முன்னெடுக்க உதவும் கிளி பீப்பிள் மக்கள் அமைப்பின் முன்னாள் பொருளாளர் அண்ணன் இ.கணேசலிங்கம் (ரவி) அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். எமது பாடசாலை பழைய மாணவியுமான Dr. சிவலோஜினி பரணிகாந்த் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.




**அ. பங்கையற்செல்வன்**
**அதிபர்**
**கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழாவுக்கு அனுசரணை வழங்கியோர்

| | |
|---|---|
| 1).கோமதி ஐயம்பிள்ளை | 50,000.00 |
| 2).செல்வராசா சேந்தன(லண்டன்) | 50,000.00 |
| 3).கிருஸ்ணபிள்ளை விஜயராஜா(பழைய மாணவன்) லண்டன் | 40,000.00 |
| 4).திரு.நடராசா(நலன் விரும்பி) | 20,000.00 |
| 5).பேரம்பலம் ஜெயகரன் நவரட்ணராஜா பிரதீபன் கணேஸ்வரச்சந்திரன் யுகந்தன் கோபாலன் கோணேஸ்வரன் | 100,000.00 |
| 6).சிவநிதி.மணியழகன்,கண்ணன்(சுவிஸ்) (பழைய மாணவர்கள்) | 40,000.00 |

## விளையாட்டுப் போட்டி-2023 அன்பளிப்பு

| | |
|---|---|
| 1).தரணிகா மோட்டோர்ஸ் | 50,000.00 |
| 2).திரு.பா.ஜெயராஜிதன் | 10,000.00 |
| 3).திரு.க.லோகேஸ்வரன் | 10,000.00 |
| 4).திரு.பொ.பத்மகாந்தன் | 10,000.00 |
| 5).திருமதி.கோமதி சிறீதரன் | 10,000.00 |
| 6).திருமதி.பபிதா கமல்ராஜ் | 10,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022-2023 செயற்றிட்டங்களுக்கான நன்கொடைகள் வழங்கியோர் விபரம்

| | |
|---|---|
| 1 திரு.விநாயகமூர்த்தி(கனடா) | 25000.00 |
| 2).திரு.தியாகராம்(லண்டன்) பால்வழங்கல் | 339100.00 |
| 3).பழைய மாணவர் சங்கம் V.C.C (பரிசளிப்பு) | 60000.00 |
| 4).த.பேரரசன்(பிரான்ஸ்)-புத்தகப்பைகள் | 33000.00 |
| 5).ப.சிவநிதி(சுவிஸ்) பரிசில் வழங்கல் | 20000.00 |
| 6).கு.கண்ணன்(சுவிஸ்)-பரிசில் வழங்கல் | 20000.00 |
| 7).பா.ஜெயரார்ஜிதன்(வட்டக்கச்சி) | 25000.00 |
| 8).வி.கிரிஜா(லண்டன்)-கற்பித்தல் உபகரணம் | 50000.00 |
| 9).மு.நடராசா(பரிசளிப்பு விழா அன்பளிப்பு) | 20000.00 |
| 10).வட்டக்கச்சி மக்கள் ஒன்றியம்(கனடா) | 150000.00 |
| 11).அர்ச்சனா குமாரதாஸ்(U.K) பால் வழங்கல் | 52000.00 |
| 12).ச.ராகுலன்- (ஒன்று கூடல் மேசை) | 100000.00 |
| 13).Eng கி.சிவகுமார் (கனடா) Smart Board | 500000.00 |
| 14).கோ.கலைமதி(கனடா)-மதிலுக்கான கல் | 200000.00 |
| 15).கனியூட் செல்வராஜ்(சுவிஸ்)-மதில்வேலை | 200000.00 |
| 16).S.K-நாதன் தண்ணீர் தாங்கி | 1500000.00 |
| 17).பேரம்பலம் குடும்பம்(திறந்தவெளி அரங்கு) | 240000.00 |
| 18).திரு.ந.சிவகுமார்(வீதி சமிக்ஞை குறியீடு) | 35000.00 |
| 19).கனியூட் செல்வராஜ்(ஒளிவிழா) | 50000.00 |
| 20).திரு.S.சுதா(கனடா)10மடிக்கணினிகள் | |
| 21)திரு.பா.ஜெயராஜிதன்(வட்டக்கச்சி)-சங்கீதவகுப்பு | 45000.00 |
| 22).க.சுதர்சன்-சுவரோவியங்கள் | 25000.00 |
| 23).பேரம்பலம் ஜெயகரன்-சுவரோவியுங்கள். | 25000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா—2023

### தரம்–01

### முதன்மை பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | துஷ்யந்தன் அக்ஷரன் |
| 02 | வரதகுமார் நோவிஜா |
| 03 | கஜனிதரன் டருண்சயன் |
| 04 | விபிதன் தியான் |
| 05 | திலீபன் டிகேஷன் |

### சிறப்பு பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | கிருஷாந் கர்ஷன் |
| 02 | ரஜீவன் அஸ்வினன் |
| 03 | மதிரூபன் மேரியனுஸ்ரிகா |
| 04 | தர்சன் டிவானி |
| 05 | சுவாணந்தன் ரக்ஷனா |
| 06 | றமேஷ் பிரியங்கா |
| 07 | மாதவரூபன் தனாமதி |
| 08 | உதயகுமார் கிஷாரா |
| 09 | சந்திரமோகன் தேனன் |
| 10 | சுதாகரன் சஸ்மிதா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா–2023

### தரம்–02

### முதன்மை பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | திருபாகரன் துசிபன் |
| 02 | பிரதீபன் அஸ்நயா |
| 03 | பபிகரன் அக்ஷயா |
| 04 | சுகந்தன் அபிர்சன் |
| 05 | சசிகரன் லிரோஜன் |

### சிறப்பு பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | அஜந்தன் ஹர்னி |
| 02 | பிரேம்குமார் வர்னிகா |
| 03 | இராஜேஸ்வரன் சஸ்மிதா |
| 04 | குகபாலன் யட்சனா |
| 05 | ரமணசர்மா சபிக்ஷாயினி |
| 06 | பாலசுப்பிரமணியம் சஞ்சை |
| 07 | உதயகாந் மேனவி |
| 08 | அமலகீதன் திவாகர் |
| 09 | கிஷாந்த் ஜஸ்மிகா |
| 10 | சிவரூபன் மிதுரன் |
| 11 | யோகராஜா தக்ஷன் |
| 12 | விஜேந்திரன் எறோண் |
| 13 | சிவஞானம் கவிசனன் |
| 14 | முகமட்றிசாம் கலைச்சன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா–2023

### தரம்–03

### முதன்மை பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | விக்கினராசா மதுஜாபன் |
| 02 | ஜெயகாந் கலியுகன் |
| 03 | சிவராசா புவிராஜ் |
| 04 | கிருஸ்ணகுமார் டனுஜன் |
| 05 | யுகதீபன் வர்சனா |

### சிறப்பு பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | றெஜிஇராசநாயகம் கனிகா |
| 02 | அருட்குமரன் தனுஜென் |
| 03 | லிங்கேஸ்வரன் லினேஸ்கா |
| 04 | ரஜீவன் ரபிஷான் |
| 05 | மதன்ராஸ் பிரியந் |
| 06 | ரூபகாந்தன் தஷானன் |
| 07 | செல்வம் திவானி |
| 08 | செல்வகுமார் டிலக்சனா |
| 09 | புஸ்பராசா பிரதிஷா |
| 10 | கிறிஸ்ரிஜேன்சன் யூட்டஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா–2023

### தரம்–04

### முதன்மை பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | ஈஸ்வரன் யாகீசன் |
| 02 | செந்தில்நாதன் சனோஜன் |
| 03 | துஸ்யந்தன் அபிஷனா |
| 04 | ஜெயரூபன் அகிம்சன் |
| 05 | திலீபன் பிரதிஷ்சன் |

### சிறப்பு பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | லக்ஸ்மன் யுனிற்றா |
| 02 | சிசேந்திரகுமார் விம்சிகன் |
| 03 | பிரபாகரன் சஞ்சயன் |
| 04 | செந்தூரன் ரிசிகா |
| 05 | ஜெகதீஸ்வரன் ஜீபனா |
| 06 | ரஜீந்திரா கிவிதிகா |
| 07 | நவரூபன் அஸ்வின் |
| 08 | தேவசீலன் கரீஸ் |
| 09 | றொபேட் கலாசியஸ் டோசினா |
| 10 | இராசகுலம் சர்ஜன் |
| 11 | இந்திரகுமார் ஆயித்தியா |
| 12 | சிவரூபன் ரக்ஷாஜினி |
| 13 | குணசேகரன் கஜேன் |
| 14 | வசந்தன் திலக்ஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா–2023

## தரம்–05

### முதன்மை பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | லோகேஸ்வரன் ரிசோபன் |
| 02 | ஸ்ரீதரன் கேசவி |
| 03 | ஜெயராஜிதன் கார்ணிகா |
| 04 | பத்மகாந்தன் துரணிகன் |
| 05 | சசிகரன் உமாருதிகா |

### சிறப்பு பரிசு பெறும் மாணவர்கள்

| இல | மாணவர் முழுப்பெயர் |
|---|---|
| 01 | கமலராஸ் சரண்யன் |
| 02 | அரவிந்தன் அபிசன் |
| 03 | குணாகரன் டக்சயா |
| 04 | ஜீவகுமார் நவீனன் |
| 05 | நிரஞ்சன் கஜாந்தன் |
| 06 | பிரதீபன் அபிநாஸ் |

| | |
|---|---|
| 08 | ஜெகதீபன் கஜீபன் |
| 10 | பத்மஉதிஸ்ரன் சபிசாஜினி |
| 11 | சிவகுமார் அக்ஷயா |
| 12 | பிரேமராஜா டிஸ்னா |
| 13 | அன்ரன் முகிந்தன் பிரமினா |
| 14 | நிரஞ்சன் தஸ்மி |
| 15 | பிரேம்குமார் சாகித்தியன் |
| 16 | பிரதீஸ் டனுஸ்கா |
| 17 | லோகேஸ்வரன் சோபிதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம்–05 சித்தியடைந்த மாணவர்கள்

| இல | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | சி.கேசவி | 164 |
| 2 | ஜெ.கார்ணிகா | 163 |
| 3 | ப.தரணிகன் | 159 |
| 4 | க.சரண்யன் | 154 |
| 5 | லோ.ரிசோபன் | 152 |
| 6 | ஜீ.நவீனன் | 151 |
| 7 | அ.அபிசன் | 147 |
| 8 | ச.உமாருதிகா | 144 |
| 9 | அ.தர்மிலன் | 119 |
| 10 | பா.சஞ்சீலன் | 108 |

| | |
|---|---|
| விண்ணப்பித்தோர் | 41 |
| தோற்றியோர் | 41 |
| சித்தியடைந்தோர் | 10 |
| 70 புள்ளிகளுக்கு மேல் | 39 |
| 100 புள்ளிகளுக்கு மேல் | 31 |
| சித்தி வீதம் | 95 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

| இல | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | உதயகுமார் பதுர்சன் | 141 |
| 2 | பிரதீபன் அபிநாஸ் | 137 |
| 3 | குணாகரன் டக்ஷஜா | 136 |
| 4 | ஜெகதீபன் கஜீவன் | 135 |
| 5 | தேவகுமார் கபிஷானன் | 128 |
| 6 | பிறேம்குமார் டிலக்ஸணா | 127 |
| 7 | ஸ்ரீகுமரன் சுதர்சா | 122 |
| 8 | சிவகுமார் அக்ஷயா | 119 |
| 9 | செல்வகுமார் கம்ஷாயினி | 118 |
| 10 | நிறஞ்சன் கஜாந்தன் | 118 |
| 11 | லோகேஸ்வரன் சோபிகன் | 117 |
| 12 | ஜோசப்விமலா டேவிற் யதுசன் | 112 |
| 13 | நிறஞ்சன் தஸ்மி | 110 |
| 14 | பிரதீஸ் டனுஸ்கா | 110 |
| 15 | றமேஸ் அபிசையன் | 109 |
| 16 | சிவனேஸ்வரன் கிஷான் | 108 |
| 17 | பிறேம்குமார் சாகித்தியன் | 107 |
| 18 | அன்ரன் மகிந்தன் பிரமினா | 105 |
| 19 | லோகநாதன் மதுர்சிகா | 104 |
| 20 | மோகனதாஸ் ஜெஸ்மின் | 104 |
| 21 | பத்ம உதிஸ்ரன் சபிசாயினி | 100 |
| 22 | கோகுலராசா வேனுயன் | 98 |
| 23 | பரந்தாமன் கோபிதா | 94 |
| 24 | சுசீந்திரன் புகழினியன் | 93 |
| 25 | கணேஸ்வரன் தரணிதன் | 92 |
| 26 | தயாகரன் மதுசன் | 79 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org